


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், 11-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி பணியினை, மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (01.09.2016) தொடங்கி வைத்தார். மண்டல இணை இயக்குநர் மரு. பின்டன் பிலியர் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 585/2016 நாள்: 01.09.2016

# கால்நடை பராமரிப்புத்துறை

# பத்திரிக்கைச் செய்தி

## கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கோமாரி நோய்தடுப்பூசி பணியை தொடங்கி வைத்தார்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 11வது சுற்று கால் மற்றும் வாய்நோய் தடுப்பூசி பணி 2016 செப்டம்பர் 1ம் தேதி முதல் 21-ம் தேதி முடிய 21 நாட்கள் நடைபெறுகிறது.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடை கணக்கெடுப்பின் படி 70350 கால்நடைகள் உள்ளன. அதில் மூன்று மாதத்திற்கு கீழ் வயதுள்ள கன்றுகள் தவிர மீதமுள்ள 69800 தகுதிவாய்ந்த கால்நடைகளுக்கு கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி போட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி பணி 21 நாட்களும் காலை 6 மணி முதல் 10 மணிவரையிலும் பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையிலும் நடைபெறும்.

கால்நோய் மற்றும் வாய்நோய் பெரும்பாலும் கலப்பின கால்நடைகளில் இரட்டை குளம்புகள் கொண்ட கால்நடைகளை தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தும் நோய் ஆகும்.

இந்நோயின் தாக்குதலினால்

1. கறவை மாடுகளின் பால் உற்பத்தி குறைகிறது.
2. எருதுகளின் வேலைசெய்யும் திறன் குறைகிறது.
3. கறவை மாடுகள் சினை பிடிப்பது குறைகிறது.
4. இளம் கன்றுகளின் இறப்பு நேரிடுகிறது.

நோய் பரவும் விதம்

இந்த நோய் பாதித்த மாடுகளிலிருந்து மற்றமாடுகளுக்கு நேரடியாக தொற்றும் தன்மை கொண்டது. பாதிக்கப்பட்ட மாடுகளிலிருந்து தீவனம், தீவனத் தட்டுகள், தண்ணீர், வைக்கோல், கால்நடைகளின இதர உபகரணங்கள் மற்றும் மனிதர்கள் மூலமும் பரவும். இந்த நச்சுயிரி மாட்டுக்கொட்டகையில் சுமார் 15 நாட்கள் வரை உயிருடன் இருக்கும். இந்த நோய் விரைவாக காற்றின் மூலம் பரவும் தன்மை கொண்டது. பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழ் நீர், சாணம் ஆகியவற்றால் இந்த நோய் அதிகமான கால்நடைகளுக்கு பரவுகின்றது.

இந்நோயிலிருந்து முற்றிலுமாக கால்நடைகளை பாதுகாப்பதற்கு செப்டம்பர் 1 முதல் 21 வரை 11-வது சுற்று கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி நமது மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் கால்நடை பராமரிப்பு துறையினரால் பல்வேறு குழுக்கள் மூலம் போடப்பட உள்ளது. இப்பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 01.09.2016 அன்று தொடங்கிவைத்தார்கள்.

எனவே கால்நடை வளர்ப்போர் இத்தருணத்தை பயன்படுத்தி எந்தவித விடுபாடுமின்றி தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிகழ்ச்சியில் மண்டல இணை இயக்குநர் மரு. பின்டன் மிஸியர், உதவி இயக்குநர்கள் மரு. ஜெயபால், மரு. ரிச்சர்டுராஜ், மரு. தயாசேகர், மரு. ஆறுமுகபெருமாள், மரு. முருகேசன், கால்நடை உதவி மருத்துவர் மரு. சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.